செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] ஆனந்த ஞூ பங்குனி மீ கச-உ வெள்ளிக்கிழமை (28-3-1975) [இல: ௫0

## இந்து மாமன்ற இருபதாவது ஆண்டு நிறைவுக் கூட்டம்

அகில இலங்கை இந்து மாமன்றம் இருபதாவது ஆண்டு நிறைவு மகாசபைக் கூட்டம். ஆனந்த ஆண்டு பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் [30—3—75] ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில், பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்து மாமன்றத்தின் முறைப்படி அங்கத்துவம் பெற்ற சங்கங்களின் பிரதிநிதிகள் தவறாது கூட்டத்திற்குச் சமூகமளிக்கும்படி பொதுச் செயலாளர் வேண்டுகின்றார்.

### அறிக்கையிற் சில குறிப்புகள்

**சிவானந்த குருகுலம்**

மாமன்றத்தினால் திருக்கேதீச்சரத்தில் 1961 ஆம் ஆண்டு ஆரம்பித்து நடாத்தப்பட்டு வந்த சிவானந்த குருகுலம் போதிய மாணவர்களின்மையால் மூடப்பட வேண்டியதாயிற்று. ஆயினும் போதிய பிள்ளைகள் கூடுதலாகக் காணப்பட்ட இடமாகிய யாழ்ப்பாணத்தில், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய மூன்றும் வீதியில் உள்ள மண்டபத்தில் சிவானந்த குருகுலத்தினை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் 36 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்களும் 1 பகுதி நேர ஆசிரியரும் வேதாகம சைவசித்தாந்த அறிவினைப் போதித்து வருகின்றனர்.

### மகா கும்பாபிடேசம்

கொழும்பு, கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் 31-3-75 முற்பகல் 9-30 மணியளவில் நடைபெறும், இதனையொட்டி நிகழ்ச்சிகள், கிரியைகள், திருமுறை ஓதல் கூட்டுவழிபாடு, ஆதியன 27-3-75 தொடக்கம் 31ந் தேதிவரை தொடர்ந்து நடைபெறும். இக் கும்பாபிடேகத்திற்கென தமிழகம் - தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள்மடம் காசிவாசி ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வழங்கப்பெற்ற அஷ்ட பந்தன மருந்துகள் மூர்த்திகளுக்குச் சாத்தப்பெறும்.

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

## நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
[ எழுதி உதவியவர் சி. சிவரத்தினம். ]

### (1) குருத்துவம் *(முன் வளர்ச்சி — 5)*

× உடம்போடு அழிதலால் பயன்படாச் சாதியுயர்ச்சி இலராயினும், உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள் (நாவலர் 2ம் பாலபாடம்)

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு (குறள்)

× சாதியினுஞ் சமயமே அதிகம் சமயத்தினுஞ்சாதி அதிகமெனக் கொள்வது சுருதியுத்தி அநுபவமூன்றுக்கும் முழுமையும் விரோதம். உலகத்துச் சாதி பேதம் போலச் சற்சமயமாகிய சைவசமயத்தினும் முதற்சாதி இரண்டாஞ்சாதி மூன்றாஞ்சாதி நாலாஞ்சாதி நீசசாதியெனச் சமய நடைபற்றி ஐந்துசாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன்முத்தர் சிவமேயாவர்: இனிச்சிவஞானிகள் முதற்சாதி: சிவயோகிகள் இரண்டாஞ்சாதி: சிவகிரியாவான்கள் மூன்றாஞ்சாதி: சிவாசாரியாவான்கள் நாலாஞ்சாதி இந்நெறிகளில் வராதவர்களும், இவர்களையும் இவர்கள் சாத்திர முதலியவற்றையும் நிந்திப்பவர்களும். இந்நெறிகளிலே முறை பிறழ்ந்து நடக்கின்றவர்களும், இந்த நடைகளை விட்ட பதிதர்களும், சதா சூதகிகளாகிய பஞ்சம சாதி உவசரியை கிரியை முதலியவைகளினாலே. பொருள்தேடி உடம்பை வளர்ப்பவர்களும், அப்பொருளைப் பாசத்தாருக்குக் கொடுத்து இன்புறுவோர்களும், கோயிலதிகளாய்த் தேவதிரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப் பொருட்டு ஆசாரியாபிஷேக முதலியன செய்துடையோர்களும், விருத்திப் பொருட்டு சிவவேடந் தரித்தவர்களும், விருத்திப் பொருட்டு துறவறம் பூண்டோர்களும், சிவஞான நூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும், பிறரும் பதிதர்களுள் அடங்குவர்கள்.

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

சிவஞானிகளாக எம்மைத் திகழச் செய்யும்

## மெய்கண்டதேவர் திருவடிவாழ்க

### பிரமசூத்திரம் - சிவஞானபோதம்

— "சைவ சித்தாந்த போதகர்" —

வேதத்தின் அந்தம் உபநிடதம். அந்தம் — முடிந்த முடிபுமாம். ஆகவே உபநிடதம் வேதாந்தம்; உபநிடதம் வேதத்தின் ஞான காண்டம். வேதாந்தமாகிய உபநிடத நூல்கள் பற்பல. அவற்றிடையே ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த முயன்றார் வியாசர். உபநிடதக் கருத்துக்களைத் திரட்டினார். அதுவே வேதாந்த சூத்திரம் வியாச சூத்திரம். அது பிரமசூத்திரம், பிரம மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை எனவும் பெயர் பெறும்.

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

### பெருந் திருவிழா

— — —

### பெரிய புராணப் பெருவிழா

காரைநகரின் பிரசித்திபெற்றதும் பழம்பெரும் ஆலயமான அருள்மிகு மணற்காடு மாரியம்மன் திருக்கோவில் வருடாந்த உற்சவம் இன்று (28-3-75) ஆரம்பமாகியுள்ளது: பங்குனித் திங்கள் 27 ஆம் நாள் (10-4-75) வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா 15நாட்களும் தினமும் மாலை 7 மணி முதல் 8-30 மணி வரைக்கும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் "திருவருட்செல்வர்" எனும் பெரிய புராண இன்னிசை விரிவுரை நடாத்தப்படும். — —

யாழ்ப்பாண வளாகத்திலே

### இந்து நாகரிகப் பேராசிரியர்

சமீபத்திலே, இந்து நாகரீகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் 17 ஆம் திகதி யாழ்ப்பாண வளாகத்திலே கடமையாற்ற ஆரம்பித்துவிட்டார். மனிதப் பண்பியல் பீடத்தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா, விஞ்ஞான பீடத்தலைவர் பேராசிரியர் பே. கனகசபாபதி, விரிவுரையாளர்கள் ஆகியோர் புதிய பேராசிரியரை வளாகத்திலே வரவேற்றனர். இவ்வரவேற்பின்போது பேராசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டார். "இன்று இவ்வளாக வரலாற்றிலே ஒரு முக்கியமான தினம். அதாவது பலவகைகளிலே முக்கியமான நாளாகும். முதலாவது இந்துநாகரிகப் பேராசிரியரை வரவேற்பதையிட்டுப் பெருமைப் படுகிறோம். இந்துநாகரிகத் துறை எனத் தனிப்பட்ட துறை வேறெந்த நாட்டிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் இல்லாத ஒன்றும். இந்தியாவிற்கூடத் தனிப்பட்ட துறையாக இது விளங்கவில்லை. கலாநிதி குருக்கள் இவ்விடத்திலே (முன்னைய பரமேஸ்வராக் கல்லூரி, இன்றைய வளாகம்) தான் தமது உயர் படிப்பினை முற்றுகப் படித்துச் சர்வகலாசாலைக்குச் சென்றவர். சேர். போன்

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

உ

### சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்

### புதிய சந்தா விபரம்

சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு

ஆயுட் கால உறுப்பினர் — ரூபா 150/-
சாதாரண உறுப்பினர் (ஒரு வருடம்) — ரூபா 20/-
பதிவுக் கட்டணம் — இருவகை உறுப்பினர்கட்கும் ரூபா 5/-

- ○ சைவ பரிபாலன சபையில் உறுப்பினர்களாகச் சேர விரும்புபவர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தைச் சபைச் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்துடன் சந்தாவும், பதிவுக் கட்டணம் அனுப்பப்படல் வேண்டும.
- ○ தற்பொழுது உறுப்பினர்களாக இருப்பவர்கள் அவர்களது சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்பாக வேண்டப்படுகின்றனர்.
- ○ ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாரந்தோறும் "இந்து சாதனம்" பிரதி இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

— செயலாளர்

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.
28-3-1975

திருக் கோயில்களில்

# பக்திச் சூழ்நிலைக்கு பங்கம் ஏற்படலாகாது

## அகத்திய முனிவரும் விநாயகரும்

"திருக்கோயில் விழாக்களில் பக்திச் சூழ்நிலைக்கு மாறுபாடான எந்த நிகழ்ச்சிகளையும் தவிர்த்து வரவேண்டும்; சைவ சமய உண்மைகளையும், திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரப் பெருமைகள், புராண இதிகாசக் கருத்துக்கள் ஆகிவற்றைத் திருவிழாக்காலங்களில் பரப்பவேண்டும்; சைவமாநாடுகள்-திருமுறைப் பெருவிழாக்களை ஆலயங்களில் ஆங்காங்கு நிகழச் செய்தல் இக்காலம் நன்மைதரக் கூடிய ஒன்ருகும் — இத்தகைய பணிகளை ஈழத்தின் பழம் பெரும சபைகளான சைவபரிபாலனசபை, விவேகானந்த சபை, ஆறுமுகநாவலர் சபை போன்ற தாபனங்கள் செய்து வர முன்வருவது விரும்பத்தக்கதொன்ருகும்"

இவ்வாறு யாழ். நல்லூர்-நாயன்மார்கட்டு வெயில் உகந்த விநாயகர் ஆலயத்தில 26-3-75 செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த சப்பரத திருவிழாவின் போதுநடைபெற்ற சொற்பொழிவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய முன்னைநாள் மலேசிய அரசப்பேரவை உறுப்பினரும், சமுகத்தொண்டருயாகிய திரு. இ. நாகரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருவிழாவில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை சமயப் பிரசார அமைச்சர் சித்தாந்த சிரோமணி திரு. மு. மயில்வாகனம் அவாகள் "அகத்திய முனிவரும்— விநாயகரும்" எனனும் பொருளபற்றிச் சிறப்புச்சொற்பொழிவாறறினர். அவர் கூறியதாவது:—

"அகத்தியர் ஒருசிறந்ததவ முனிவர். சிவபெருமான் வடமொழி இலக்கணத்தை பாணினி முனிவருக்கு உபதேசித்தது போல் அகத்திய முனிவருக்குத் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தார், அவர் "அகத்தியம்" என்ற தமிழ் இலக்கண நாலை எழுதியருளினுர் சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் இமய மலையிற் திருக் கலயாணம் நிகழ்ந்தபோது தேவர்களும் முனிவர்களும், பிறரும் அஙகு குழுமினுர்கள். அதன் காரணமாக வடதிசை தாழ்ந்தது. தென்திசை உயர்ந்தது! எல்லோரும் பயந்து நடுங்கினர்! சிவபெருமான் அகத்தியரை நோக்கி, "நீ தென்திசையிலுள்ள பொதிய மலையிற் சேர்ந்து அங்கு தவஞ்செய்து கொணடிருப்பாயாக. அங்கு உனக்குத் திருக்கல்யாண வைபவத்தைக் காண்பிப்போம்" எனத் திருவாய் மலர்ந்தார். அகத்தியர் அவ்விதமே செய்யப் பூமி முன்னைய சமநிலையை அடைந்தது. திருக்கல்யாணம் சிறப்பாக நடந்தது அகத்திய முனிவருடைய தவப்பெருமை அளப்பரியது.

அகத்திய முனிவர் அசுமுகியினது புத்திரர்களாகிய வில்வலன், வாதாவி என்ற இருவரையும் கொன்று நலம புரிந்தார். பின்பு அவ்விருவரையும் கொன்ற பிரம்மகத்தி தோஷம் அவரைத் துன்புறுத்தியது. அதனை நீக்குதற்கு அகத்திய முனிவர் கொங்குதேசத்தில் ஒருபுறத்தில் சிவலிங்க மொன்றைத தாபித்து வழிபட்டுக் கொண்டிருந்தா அந்தக்காலத்தில் நாரத முனிவர் சீர்காழியில் சூரபன்மனுக்குப் பயந்து ஒளித்துத் தவஞ் செய்து கொண்டிருந்த இந்திரனைக் கண்டார். இந்திரன் "சுவாமி அடியேனுக்கு ஒரு குறை உள்ளது. நான் சிவபெருமானைப் பூசிப்பதற்கு ஒருநந்தவனத்தைத் தாபித்தேன்; மழையின்மையினுல் அந் நந்தன வனம் வாடிக் கருகிப் போயிற்று. சிவபெருமானைப் பூசிப்பதற்குப் பூவில்லாமல் வருந்துகிறேன்' என நாரத முனிவருக்குமுறையிட்டான்.

நாரதமுனிவர் அப்பொழுது இந்திரனைப் பார்த்து, "இந்திரனே! கொங்கு தேசத்தில் அகத்திய முனிவர் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து சிவபெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கின்றுர், அவரருகில் ஒரு கமண்டலம் இருக்கின்றது; அதனுள்ளிருக்கும் காவேரி நீரை விநாயகக் கடவுள் கவிழ்த்து விடுவாராணுல் அந்நீர் ஆருகப் பாய்ந்து ஓடும்! அந் நீர் இங்கு வந்து சேருங்காலத்தில் உன்னுடைய நந்தன வனம் செழிப்புற்று வளரும உன்னுடைய சிவபூசைக்குத தேவையான புஷ்பங்களை முட்டின்றிப் பெறலாம்" என்று கூறினுர்.

### என்ன வரம்வேண்டும்

இந்திரன் விநாயகப் பெருமானை பக்தியோடு முறைப்படி பூசிததான அப்பொழுது விநாயகப் பெருமான இந்திரனுக்கு முன்பாகத தோன்றினுர் 'உனக்கு என்ன வரம்வேண்டும?' என்று இந்திரனைப் பார்ததுக் கேட்டார். 'சுவாமி! என துநந்தன வனம் நீரில்லாமல வாடுகின்றது! அதனுல் சிறியேன் சிவபெருமானைப் பூசிப்பதற்கு தடையுண்டாயிறறு" எனறு கூறினுன. அகத்திய முனிவா வழிபாடு செயது கொண்டிருக்கையில விநாயகபபெருமான ஒரு காக வடிவாகச் சென்று அவருக உணித்தாக வுள்ள கமண்டலத்தின மேல உடகார்ந்திருந்து அக்கமண்டலத்தைக கவிழ்தது விட்டார் அப்பொழுது அக்கமண்டலத்தில இருந்த காவேரித தீர்த்தம் ஒரு பெரிய ஆருகிப பாய்ந்தது. அவ்வாறு சீர் இந்திரனுடைய நநதவனத்திற்கும உதவிபுரிந்து அவன சிவபெருமானை முறைப்படி பூசிப்பதற்கும உதவிபுரிந்தது அகத்திய முனிவா தமது கமண்டலத்தை கவிழ்தது காகத்தைத் துரத்தினா, விநாயகப் பெருமான ஒரு பிராமணச் சிறுவனுகக் காட்சி கொடுத்தார், அகத்தியமுனிவர் அச்சிறுவனைத் தண்டிப்பதற்காக துரத்தினார் அச்சிறுவன் அவருக்கு எட்டாதபடி தூரத்தே ஓடிவிடுவான! பின் அவருக்குச் சமீபத்தில் வருவான்! இவ்விதமாக அகத்தியமுனிவரை வருத்திய விநாயகப் பெருமான் தமது சுயவடிவத்தில் அகத்தியருக்குக் காட்சி கொடுத்தார். அப்பொழுது அகத்திய முனிவருக்கு அவருடைய கமண்டலத்து நீரைக கவிழ்த்தமைக்கான காரணத்தைக் கூறினுர், அகத்திய முனிவர் விநாயகப் பெருமானைப்பார்த்து "சுவாமி உம்மை அறியாது தண்டிக்க முயன்றேன் அதனைப் பொறுத்தருளல்வேண்டும்! உம்மைத் தண்டிப்பதற்குக் கரங்களைக் கவித்தமாக்கிக் கொண்டு குட்டுதற்கு முயன்றேன் இப்பொழுது எனது இரு கரங்களையும் கவித்தமாக்கி என சிரசிலேயே குட்டிக் கொள்கின்றேன்' என்று கூறினுர்.

இரங்கிய முனிவன் முன்ன
மேந்தலைப் புடைப்பான் கொண்ட
கரங்களை யெடுத்து வானிற்
காருரு மேறு வெற்பி
னுரங்கிழி தரவே நீங்கா
துரப்பினில் வீழ்வதேபோல்
வரங்கெழு தனது நெற்றி
வருந்துறத் தாக்கலுற்றுன்

அகத்தியர் கவித்தமாக்கிய தம்கைகளிரண்டினுலும் தமமுடைய நெற்றியில் இடி விழுந்தாற்போல் முழு வன்மையுடன் குட்டிக்கொண்டார். விநாயகப்பெருமான் இதற்கு அகத்தியரைப் பார்த்து "நீ நம் தந்தையாகிய சிவபெருமானிடம் மெய்யன்பு கொண்டவன்; ஆதலால் நீ நமக்கும் அன்பன்; நீ வேண்டிய வரங்களைக கேட்பாயாக" என்ருர்.

அகத்தியமுனிவர் விநாயகக்கடவுளை வணங்கி. "அடியவன் தேவரீரிடத்திலும் சிவபெருமானிடத்திலும் என்றும் குன்ருத அன்புடையவனுகத் திகழல் வேண்டும். அடியேன் இப்போ குட்டிக் கொண்டதுபோல தேவரீர் சந்நிதானத்தில் குட்டிக் கொள்பவர் குறையினைத் தீர்த்து அவர்களுக்குத் திருவருள் புரிதல் வேண்டும்." என்று வேண்டிக்கொண்டார். விநாயகர் மேலும் வரங்கள் கேட்குமாறு கூற, அகத்தியா கமண்டலத்தில் இருந்த சிவபெருமான் தந்த நதி நீர் முற்றும் போய் விட்டதால் அத்தூய்மையான நதிக்குப் பதிலாக நல்ல தீர்த்தத்தைக் கொடுத்தருளுமாறு வேண்டினுர்.

விநாயகக்கடவுள் பூமியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த காவிரியாற்றிலேயே தம்முடைய திருக் கரத்தால் நீரை அள்ளி அகத்தியரின் கமண்டலத்தில் விட்டார் அகத்தியர் தமது கமண்டலம் நிரம்பி வழிவதைக் கண்டு பெருமகிழ்வு எய்தி, விநாயகரை நோக்கி, "கவிழ்ந்த நதியையும் முன்போலத் தந்தருளினீர்! அடியேன் உய்ந்தேன்!! வேண்டுங்கால் எழுந்தருளி வந்து அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். விநாயகக் கடவுள் அவ்வாறே அருள் செய்து மறைந்தருளினுர்" என்றும் கூறினுர்.

### தலைமை இல்லாதவர்

தொடர்ந்து பேசும்போது அவா குறிப்பிட்டதாவது:—

"விநாயகர்" என்ற பதம் வி + நாயகர் என்ற இரு பதங்களின் சேர்க்கையால உருவானது. 'வி' எனபதன் பொருள் இன்மை'. நாயகர் எனபதன பொருள் தலைவன். ஆகவே விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேலாக ஒரு தலைமை இலலாதவன என்பதாகும்.

விநாயகர் பிரணவ சொருபமாக உள்ளவர் இத் திருக கோயில் மிகவும புராதனமானது. 16-ஆம் நூற்ருண்டளவில் பறங்கிககாரர்களால இது தரை மட்டமாககப்பட்டது. அப்பொழுது வழிபடு மூர்த்தியாயிருந்த விநாயகர் திருவுருவததை அடியார்கள மண்ணுலமூடி மறைத்து வைத்து விட்டார்கள. பினபு கண்டெடுககப்பட்டு ஆலயம 19-ஆம் நூற்ருண்டளவில புனருத்தாரணம செய்யப்பெற்றதாக ஆலய வரலாறு கூறுகிறது. இவவாலயததை ஊர் மககள பாது காதது வருதலவேணடும. மககள கஷ்டமான நிலையில இககாலம வாழகின்ருர்கள், விநாயகப்பெருமானுடைய திருவடிகள எம்மைப பாது காக்கும. ஆகவே நீஙகள எலலோரும அவருடைய திருவடிகளை மறவாது வாழுங்கள.

---

## திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி

[அருள். தியாகராசா, உப-தலைவர் கொழும்பு விவேகானந்த சபை]

[ முன் வளர்ச்சி — 3 ]

ஈழநாட்டிலே, பெருந்தொயான வயல்களையும், காணிகளையும், கட்டிடங்களையும், சிதம்பரம் அமபலவாணசுவாமிக்கும், இராமேஸ்வரம் இராமநாதேசுரர் கோயிலுக்கும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிக்கும் எங்கள் முன்னேரிற் பலர் தர்ம சாதனமாக வழங்கினுர்கள். இவைகளை யெல்லாம், காவிதரியாத தம்பிரான்மார்களும் காவியுடுத்த தம்பிரான்களும் பரிபாலித்து அவற்றிலிருந்து பெறப்பட்ட வரும்படிகளை யெல்லாம் அவற்றிற்குரிய ஆலயங்களுக்கு ஓரளவில் அனுப்பிவைத்தனர். இப்பொழுது அரசாங்கத்தின் சட்டத்தினுலும், கட்டுப்பாட்டினுலும் தென்னுட்டுக்குரிய சைவாலயங்களின் வரும்படிகளையெல்லாம் இந்நாட்டிலிருந்து பொருளாகவோ பணமாகவோ அனுப்பமுடியாத நிலை வந்துள்ளது. இந்நிலையைத் தருமசாதனஞ் செய்த எமது முன்னேர்கள் சற்றேனும் எதிர் பார்த்திருக்கவே மாட்டார்கள்.

சைவமக்களாகிய நாம் எமக்குச் சாதகமில்லாத சூழ்நிலையைப் பயனுள்ள சாதமாகமான நிலையாக்கிப் பயன்படுத்தத் தயங்கக் கூடாது. மேற்குறிப்பிட்ட தமிழ்நாட்டின் ஆலயங்களுக்குச் சொந்தமான ஈழநாட்டிலுள்ள பொருட்களின வரும்படிகளையெல்லாம் (இந்நிலைமை மாறும்வரை) திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச்சபை பரிபாலிப்பதுடன் திருப்பணிக்கே உபயோகிக்கலாம் அதற்கு நாம் சில நல்ல வழிவகைகளைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும் முதலில் தென்னுட்டிலுள்ள தேவஸ்தானங்களின் சம்மதத்தைப் பெறலாம் சம்மதத்தைப் பெறறபின் எமது அரசாங்கமும் அதற்கு இணக்கம் தெரிவிக்கும் மென்று கருத இடமுண்டு. கண்டியிலுள்ள பௌத்த பீடங்களாகிய மல்வத்தைபீடம, அஸ்கிரிய பீடம் உரிய விளைநிலங்களையோ ஆதனங்களையோ பௌத்தசமயததிற்கு முதலிடத்தை அளித்திருக்கும் இந்த அரசாங்கம் எடுக்க மாட்டாது. சைவக்கோயில்களுக்கோ, சைவத்தாபனங்களுக்கோ விடப்பட்ட தர்மச் சொத்தை, மான்னியத்தை. சைவசமயத்தின் பொருட்டும் சைவத்திருப்பணிக்குமே செலவிடலாமொழிய வேருென்றிற்கும் பயன்படுத்தல் பாவமென்று எங்கள் ஆறுமுகநாவலர் பெருமான் தாமெழுதிய நூல்களில் அறிவுறுத்தியிருக்கின்ருர்.

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையுடன், பழம்பெருமைவாய்ந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, தலைநகரிலுள்ள கொழும்பு விவேகானந்தசபை, இந்துமாமன்றம் முதலிய சைவசபைகள் ஒத்துழைத்து இக்குறிக்கோளை அடைய முடியுமென்று கருதுகின்றேன். தென்னுட்டிலுள்ள சைவக் கோயில்களுக்குரிய வடமாகாணத்திலுள்ள ஆதனங்களின் வரும்படியை திருக்கேதீஸ்வர ஆலயமும், கிழக்கு மாகாணத்திலுள்ள ஆதனங்களின் வரும்படியை திருக்கோணேசர் ஆலயமும் பயன்படுத்தலாம்.

(வளரும்)

---

## ஆலயத் திருப்பணி

—-0—-

உடுவில் மல்வம் பெருமாள் தோட்டத்துப் பேய்ச்சியம்மன் ஆலயத்துக்கான அடிக்கல்லைச் சிவநெறிப் புரவலர் க. கனகராசா அவர்கள் 26-3-75 புதன்கிழமை காலை நாட்டி வைத்து விழாவை ஆரம்பித்தார். அவ்வமயம் ஆலய வழிபாடு பற்றி திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் சொற்பொழிவாற்றினுர்கள். அன்று நண்பகல் அன்னதானமும், மாலை சமயச் சொற்பொழிவுகளும கலை நிகழ்ச்சிகளும இடம்பெற்றன. ஆலயத் திருப்பணி வேலையை அம்பாள் இந்து மகா சபையினர் பொறுப்பேற்றுநடத்துகின்றனர். ——

## கந்த புராண படனம்

——

நல்லூர் நாவலர் மண்டபத்தில் கந்தபுராண படனம் தினமும் பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை நடைபெற்று வருகிறது. பங்குனி உத்தரத்தன்று நல்லைக் கந்தசுவாமி கோவிலில் உருத்திராபிஷேகமும் நாவலர்மண்டபத்தில் திருக்கல்யாணப் படிப்பும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் இதற்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர்.

[illegible]

Price 20 Cts.

Supplement to the "INTHUSATHANAM"


Our Work is
Our Advertisement

Saiva Prakasa Press

# INTHUSATHANAM
## (The Hindu Organ)

( The only Newspaper in Ceylon for the Hindus )
PUBLISHED EVERY FRIDAY

FOR BOOKS ON
SAIVAISM

Dial 356

Saiva Prakasa
Book Depot

Estd. Sept. 11, 1889 JAFFNA, FRIDAY MARCH 28, 1975 Phone No. 356

# GURU - PAST AND PRESENT

By
M. ELIATHAMBY. B. A.

A Guru, in those early days, had a few disciples who looked upon him with reverence as he was the source of inspiration to them in their intellectual and spiritual pursuits. They believed everything that came from his mouth. They had full faith in him. They learned under his guidance and became great scholars and men of great erudition imbibing a respect for high values and great ideals in life. They led a disciplined life and knew to practise virtues such as honesty, integrity, self - discipline, temperance and at the same time to shun vices. They left footprints in the sands of time.

If their disciples had become men of learning and culture, we can imagine what high pedestal the Gurus occupied. Several generations of scholars maintained that old tradition until the old order changed yielding place to new. Waves of new thoughts and ideals entered the sphere of education bringing about a world of changes to suit the changing society and environment due to increasing population and social and economic factors. New educational systems, curriculum, methods have been evolved. Teachers who have received education under entirely a different set of conditions with emphasis on values which are different from those of the past are performing their duties in schools now.

The study of science and arts, availability of books, magazines, newspapers, radio talk, colleges and universities have opened new vistas of knowledge. All knowledge that accrues to the students who have an eager desire for science is devoid of religious background. Their inquiry about God, the gleams of whose presence is felt only by those who went to quench their spiritual thirst through meditation tends to be one of analysis of material objects in the field of science. That is impossible. The supreme being who pervades all knowledge and material things and yet transcends them all cannot be brought within the ambit of rational thinking.

The students of today acquire knowledge and skills which are indeed assets to them but some of them seem to clack the required culture which ought to be the essence of education. Interfering in the affairs of others, entering a house without permission, intruding while two persons are engaged in conversation, trying to open a letter in the absence of the owner, attempting to get unfair assistance in an examination hall, pickpocketing were spurned as bad manners in those days. These undesirable habits even if they are found among young men who have left school, are reprehensible.

Study of Literature, Religion and Humanities helps students have a good insight into human nature, to understand the purpose of life and to know about noble ideals and achievements. To know about Harichandra or Gandhi is to know about the ideals of Truth and Ahimsa which those great men stood for. They should know why Rama was respected as a hero. Some say that education is incomplete without the study of Shakespeare. Shakespeare is not of one country but of all countries. We learn about human nature through the study of Shakespeare's characters. A Shylock, an Iago, a Lady Macbeth a Caesar and a Brutus, a Hamlet and a Lear are characters for a critical study about the human nature, How many students of science and arts passing out of the portals of a University today have a chance to study Shakespeare for similar great works. Lack of provision for at least a general study of Literature, Religion and Humanities for all students deprive them of the proper knowledge and understanding that are necessary to help them become men of strong character and personality.

The teachers of today with their high academic qualifications are doing good and sincere work in their schools, Yet some students don't seem to have inculcated a taste for several good things in life. Some young men resort to vulgar ways of living or put an end to their lives due to frustration. Some cause destruction to public properties like some wanton boys who kill butterflies Such behaviour has to be condemned. The blame is put on the training and foundation they had at school The good work of the teachers seem to

( Over to page 4)

### Jaffna Saiva Paripalana Sabhai

**New Subscription Rates**

*To the Notice of Members of the Sabhai*

Life Members: Rs. 150/-

Ordinary Members: Rs. 20/- per year

Registration fees in each case Rs. 5/-

Persons who wish to join the Sabhai as members are requested to send their applications on forms obtainable from the Secretary, along with their subscriptions and registration fees to the Secretary.

Those who are already members are requested kindly to pay their subscriptions.

Every member shall receive a copy of the Inthusathanam free of charge.

Secretary

28-3-1975.

*Letter to the Editor*

# TIME FOR DIALOGUE AND CO-OPERATION

Sir,—

Dialogue constitutes an important, if not as essential, factor for the conduct of democratic government. In the case of social democracies, such as that of Sri Lanka, dialogue ought to occupy a still more important place, for socialism is not possible without dialogue. Dialogue could be in writing through personal correspondence, or through the medium of the press. In addition to such dialogue in writing, it could be carried out through talks and oral discussions.

It has been suggested that dialogue could be had between the Tamil United Front leadership and the Sinhalese and Government leadership.

In the circumstances now prevailing in Sri Lanka, it is best that a start should be made, in the first instance, with dialogue in writing between the T. U. F. leadership and the Government leadership and with the Opposition in Parliament. The matters which are subject of controversy are longstanding, delicate and difficult, It is desirable for the purpose of facilitating a pleasant and clear despatch of the affairs of the State, that the dialogue should commence through correspondence between the parties concerned.

There can be no harm in any one of the three groups, namely, the Tamil leadership, the Government Party leadership and the Parliamentary Opposition leadership, initiating such correspondence without waiting for the other parties to make the first move.

The esteemed Tamil leader, Mr. Chelvanayagam, when he resigned his seat in Parliament stated that he was resigning in order to show the dissatisfaction of the Tamil people with the present constitution, Now that he has been re-elected, an ordinary citizen like myself without adequate knowledge of parliamentary procedure cannot say definitely whether he could make another statement in Parliament, after his re-election, to follow up the earlier statement made before resignation. This is an incidental and auxiliary submission for consideration.

In fact, such a statement in Parliament could go hand to hand with correspondence between the groups. Whoever makes the first move would be rendering a distinct service to the country and to the people

An important reason for written dialogue is that it would minimise risk of misunderstanding and clarify things. The present position is not satisfactory from the point of view of the country as a whole or from the point of view of any community, including the Tamil people, By trying to embark upon or insist on personal dialogue, matters could even deteriorate. Such a situation is best avoided. It is sad to realise that attempts to hold personal dialogue between two respected leaders of India, Shrimathi Indira Gandhi and Shri Jayaprakas Narayan, have not improved matters in the great subcontinent, but, on the other hand, there has been a deterioration in the relationship between the different groups.

There is also a possibility of personal conferences working to the disadvantage of the country, and in a special manner to the Tamils, if such conferences are held immediately as things are. If personal conferences are to bring any benefit, they should be preceded by written dialogue If it indicates any good augury, then it would be time enough to think of personal conferences.

There is another matter worthy of being mention-

Over to page 4 )

### THOUGHTS TO BE TREASURED

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்,
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்,
அன்பே சிவமாவது யாரும் அறிவரேல்
அன்பே சிவமாய் அமர்ந்து இருப்பாரே,

Love and God are, fools say, not one,
Love and God they know not are one,
Love and God when men know are one,
As Love they merge in God as one.

திருச்சிற்றம்பலம்
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY. MARCH 28, 1975

# WATER — NOW A WANT?

The Northern region of our country having no rivers of perennial flow or mountains of any size has developed aridity so much that unless the elements oblige periodically and fill the tanks which fortunately preserve the means as minor reservoirs, the people will have to face a continuous threat of failure of food crops and consequentially frightful famine.

The problem of the supply of water for drinking purposes has been all along drawing the attention of the Authorities particularly in certain areas along the sea coast and the numerous islands around the Peninsula. The sources of good water are not many and the few that are available face imminent danger of running dry owing to persistent drought.

Water, therefore, has now become a problem of top priority requiring the careful consideration of the Authorities and the deep concern of the people. It is no wonder, that the residents of the city of Madras have been warned against the misuse or excessive use of water — This is in a country where great rivers and high mountains are a normal gift of nature.

In our country, the Arid North requires special attention of the Authorities in the matter of solving the problem of water. Modern scientific efforts have successfully helped man in finding relief in the supply of essential necessities of life. Wells, tube and other varieties, are urgently needed in the outlying areas of the Peninsula. Local Bodies have to move strenuously to obtain from the Central Government the necessary funds and the required materials and implements for the immediate provision of tube wells in these parts.

## FIENDISH FELONY

That a very popular King, the ruler of progressive Saudi Arabia, should fall prey to the felonious and frenzied act of one of his nephews is a tragic event that makes the entire world go into mourning.

Saudi Arabia, under the guidance of King Faisal, has been making significant strides of advancement so much that the other nations of the world have all been recognizing the progress with special attention.

The world seems to have been overtaken by reactionary trends of evil thought And assassination has become a matter of course! What is the remedy. Return to religious living is the only way.

## Letter to the Editor

( From page 3 )

ed. The point whether parliamentary procedure permits Mr. Chelvanayagam to make a statement in Parliament has been raised by me earlier. In the same context, the feasibility might be considered of the esteemed Leader of the Opposition, Mr J. R. Jayawardene, raising the matter in the National State Assembly. Certain earlier experiences, recent happenings in Jaffna when Mr Jayawardene and his colleagues went to the North, his utterances there in reply to questions and his frank statement as reported in the Press about his present attitude vis-a-vis the past, make it desirable that the entire picture be surveyed fully again.

Our Prime Minister, Honourable Mrs. Srimavo Ratwatte Bandranaike, has been making statements from time to time on various important subjects relating to the national life and Government policy. It is respectfully submitted that the issues raised by the Tamil people and their requirements are such as to merit a statement to the public from her. It could be said that prior dialogue through correspondence and later, if feasible, through personal conferences would perhaps be helpful even for the issuing of such a statement.

The sentiments and hopes expressed in the following stanza find an echo in my heart and my humble prayer is that, may it be so with all sons and daughters of Sri Lanka to whatever race they belong, whatever language they speak, whatever region they inhabit and whatever religion they profess:

"To suffer woes which hopes think infinite,
To forgive wrongs darker than death or night;
To defy power, which seems omnipotent,
To love and bear, to hope till hope creates,
From its own wreck, the thing in contemplates;
Neither to change, nor falter nor repent;
This is alone life, joy, empire and victory".

The welfare of the country demands the co-operation and joint efforts of all communities. There are many urgent problems to be dealt with; among them: food shortages, unemployment and the high cost of living. These cannot be solved on a partisan basis. The welfare of any single community requires the co-operation of the other communities. It would in the long run be unwise and unfair to rely entirely on the political cohesion of any single community. In any event, it is preferable to look for sanction in the first instance in the co-operation of all communities, rather than exclusively on the cohesion of any single community or on the cohesion of the Parliamentary representatives belonging to it, though such cohesion, if founded on noble and unselfish principles is always to be welcomed.

There is a time for everything. This is a time for dialogue co-operation and united effort. If Ceylon is to survive and if the various communities in it are to survive, the greater and overriding emphasis for the time being should be on inter-communal harmony, co-operation, friendship and love, giving effect to the age-long principle of "All for one, and One for all."

S. Sivasubramaniam
103/2 Hultsdorf Street
Colombo 12

## The Jaffna Co-operative Stores Ltd.

Whereas Kanagaratnam Somasundaram, of Kokuvil East, Kokuvil, has applied to the Directors of the abovenamed Company for the issue of a duplicate Certificate in respect of 9 Ordinary Shares of Rs. 100/- each numbered: 2938 - 2943; 4826 - 4828 registered in his name, the original of which is represented to have been lost or mislaid. NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for duplicate Certificate the original of which will be deemed to have been cancelled.

T. Somasundaram,
Secretary.
420, Hospital Road,
Jaffna,
21st March, 1975.

## GURU—PAST...

( From page 3)

get impaired, if the students don't live up to the standard. The teachers should be respected as they are performing to noble task of shaping the character of the future citizens.

## NOTICE

IN THE DISTRICT COURT
OF POINT PEDRO

No. 11707

Kandavanam Kandasamy of Polikandy

Vs. Plaintiff

1 Jagatheeswary daughter of Maniccam Balasingam of Valvettiturai
2 Chelliah Nadarajah of Polikandy
3 Chelliah Kidnapillai of do
4 Thanabalasingam Arumugam of do
5 Thanabalasingam Sabaratnam of do
6 Maniccam Balasingham of do G-A-L over 1st Defendant

Defendants

It is hereby notified that action No. 11707 has been instituted in the District Court under the Partition Act No. 16 of 1951 for the Partition/Sale of the land called Pathavalaivaykal in extent Thoddam 10-do- in extent 32½ Lms. V. C., the divided extent of 15½ Lms, V. C. Polikandy, Parish of Udupiddy.

The defendants in the aforesaid action were summoned to appear in Court on the 12th day of September 1972 at 9 O'clock of the forenoon.

This 19th day of March 1975.

By order of Court

A. Thavarajah
Registrar.

47, 28

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday March 28, 1975.

Editor-in-Chief R. N. Sivapirakasam

## ஞானப்பிரகாச முனிவர் குருபூசை

—0—

மேற்படி குருபூசை 23-3-75 ஞாயிற்றுக்கிழமை சபை நாவலர் மண்டபத்தில நடைபெற்றது.

சிவபூசை மண்டபத்தில் சிவபூசை நடந்தபின் நாவலர் மண்டபத்தில் நடராஜப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்றன. தமிழ்மறை ஓதிய பின் மேற்படி முனிவருடைய சரித்திரம் படிக்கப்பெற்றது.

## சர்வோதய மாநாடு

சர்வோதய ஊழியர்கள் மாநாடு எதிர்வரும் 30-3-75 ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி மைற்றின் மண்டபத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை நிகழும்.

சிவதர்ம வள்ளல், பூலோக கற்பகதரு நாயகர் திரு. க. கனகராசா ஜே பி, அவர்கள் திருவிளக்கேற்றி மாநாட்டை தொடக்கி வைப்பார்.

## இந்து நாகரிகப்

1 ஆம் பக்க வளர்ச்சி

னம்பலம் இராமநாதன் அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் முகமாக அமைக்கப்பட்டுள்ள இவ்வளாகத்திலே இந்து நாகரிகத்துறை முக்கிய இடம் வகிக்கின்றது. இத்துறைக்குத் தலைமை தாங்குதற்கு பேராசிரியர் குருக்கள் முழுமையான தகைமைகள் கொண்டவர். எனது பழைய விரிவுரையாளரும், சக விரிவுரையாளருமான இவரை வரவேற்பதிலே மிக மகிழ்ச்சியடைகிறேன்'' என அவர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் இத்துறையினை நன்கு வளர்ப்பதற்கு என்னால் இயலுமான எவற்றையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். எனக்கு அதிகம் பேசுவதில் நம்பிக்கையில்லை. என்னால் செய்யக்கூடியனவற்றைச் செயலிலேதான் காட்ட விரும்புகிறேன்'' எனக் குறிப்பிட்டு திரு பொன்னம்பலம் இராமநாதனுக்கும் தமது குடும்பத்திற்கு மிடையிலிருந்த நல்லுறவுகளையும் நினைவு கூர்ந்தார்.

பேராசிரியர் குருக்கள் பிரமஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள், பேராசிரியர் பெற்றிக்கேஷ்யமான். பேராசிரியர் ஓ. எச். டி. எ. விஜயசேகரா ஆகியோரின் சிறந்த ஒரு மாணவராவர். இந்தியாவின் பிரபல வடமொழி அறிஞரான பேராசிரியர் ஆர். என். தண்டேகர் மேற்பார்வையிலே சைவசமயப்பற்றிய சிறந்த ஆய்வு நடாத்திக் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இந்திய, மேனாட்டுக் கல்வி மரபுகளை ஒருங்கே கொண்டவர். பல கட்டுரைகளும், வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக காலம்) சைவக்கிரியை விளக்கம் முதலிய நூல்களும் எழுதியுள்ளார்.

## நாவலர் பிள்ளைத்தமிழ்

[ ஒன்பதாவது : சிறுபறைப் பருவம். ]

(முன் வளர்ச்சி — 73)

ஆக்கம் : "பழைய பாணி"

பார்கொண்ட பஞ்சபசி பட்டினிக் கஞ்சலீர்
பலன்கண்ட வேளாண் மையிற்
பங்கெடும் பங்கெடு மெனப்பலரை யூக்கல்கொல்
பரகதிக் கருகமாகும்
சீர்கொண்ட சைவநிலை நிறைகொண்ட சற்சங்க
நிறுவியிங் கெங்கு மலியும்
நெறியலா நெறியவை நிராகரித் திடவுற்ற
நினைவுகொல் நிகமாகமப்
பேர்கொண்ட நல்லைப் பிரான்புனர்த் தாபனப்
பிரசங்க அறிவித்தல் கொல்
பிரசித்த மேற்கொண்ட பிள்ளைநின் சித்தமென்
பேசெனப் பிறருசாவச்
சீர்கொண்ட நல்லையாய் தெருவுதோறிசை கொண்ட
சிறுபறை முழக்கி யருளே
செந்தமிழ்க் குருளையென வந்தருளு மமரபதி
சிறுபறை முழக்கி யருளே. 6.

## சிவஞானிகளாக எம்மைத் திகழச்செய்யும்

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

சூத்திரம் சில எழுத்துக்களிற் பல பொருள்களை அடக்கிய யாப்புச் செய்யுள்.

நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் சூத்திரத்தால் ஆனவை. தமிழிலுள்ள சமய நூல்களிற் சிவஞான போதம் சூத்திரங்களால் ஆனது. 12 சூத்திரம்; 40 வரி. மிகச் சிறிய நூல்; மிகப் பெரிய பொருள் வேத ஆகமக்கருத்துக்கள்

அது சைவ சாத்திர மூல மூர்த்தி. சித்தியார், சிவப்பிரகாசம் உற்சவ மூர்த்திகள்.

வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம், சைவ சித்தாந்த மூல நூல் சிவஞான போதம். அதன் கருத்து பிரம சூத்திரத்திற்கும் உடன்பாடாதல் வேண்டும்,

அத்துவிதம் என்னும் சொற்குப் பலரும் பல்வேறு உரை கண்டமை போலப் பிரம சூத்திரத்திற்கும் ஒன்றுக்கொன்று மாறுகப் பல உரைகள் எழுந்தன.

சூத்திரத்தின் பேருரை பாடியம் எனப்படும். வேதாந்த சூத்திரத்திற்குச் சைவர்களாற் கொள்ளத் தக்க உரை கண்டவர் நலகண்ட சிவாசாரியர்.

வேதாந்த சூத்திர சங்கர பாடியம் மாயாவாதிகளாற் கொள்ளப்படுவது. இராமாநுஜ பாடியம் வைணவர்களாற் கொள்ளப்படுவது. மாத்துவ பாடியம் மாத்துவர்களாற் கொள்ளப்படுவது. இவ்வாறு பிரம சூத்திரமாகிய ஒரு நூலுக்குப் பற்பல பாடியங்கள் எழுந்தன. மற்றொரு வகையிற் கூறின் ஒவ்வொரு சமயப் பிரிவினரும் தத்தம் கொள்கையையே பிரம சூத்திரம் விரித்துரைக்கின்றது எனப் பொருள் கண்டனர்; காட்டினர்.

இதனால் சமய ஒற்றுமையை நிலை நாட்ட எழுந்த பிரமசூத்திரம் பல்வேறு பிரிவினரை வளர்க்க உதவிற்று.

இவ்வாறு பல்வேறு பிரிவுகள் ஏற்பட்டமை இறைவன் திருவருளே. நமது கன்ம வினைக்கேற்பப் பற்பல சமயங்கள் — பற்பல உரைகள் ஏற்பட்டன. சமயம் கடந்த நிலை சமயாதீதம் எனப்படும். சைவத்தின் நோக்கு சமயாதீத ஞான நிலையை ஏற்படுத்துவதே — சீவ முத்தர் நிலை அது. இதற்கு வாயில் சைவ நாற்பாதங்கள். ஞானத்தில் ஞான நிலை அந்நிலையைத் தரும்

சமய குரவர் முதலியோர் பத்தி மேலிட்டுத் திருவருட் சார்பு பெற்று நம் பொருட்டு வெளியிட்ட தோத்திரக் கருத்துக்கள்கூட இவ்வுரைகளால் நிலை தளரலாயின — பொய்யோ? மெய்யோ! என்னும் ஐயத்தை ஏற்படுத்தின.

இந் நிலையிற் சைவத்தை நிலை நாட்ட இறைவன் திருவருளாலே அவதரித்தவரே மெய்கண்டதேவநாயனார்.

பிரம சூத்திரத்தின் பல்வேறு கருத்துத் தாக்கங்களால் தளர்வுற விருந்த சைவத்தையும் தேவாரத் திருவமுதமாய திருமுறைகளையும் காப்பாற்றி வைத்தபெருமை சிவஞான போத சூத்திரத்திற்கும் அதன் வழி வந்த ஏனைய சாத்திரங்கட்கும் சிவஞான முனிவர் அருளிய மா பாடியத்திற்கும் சிற்றுரைக்குமாயிற்று. அதனாலேயே நாவலர் பெருமான் போன்றோர் "திருச்சிற்றம்பலம்" என நூலைப் பூர்த்தி செய்த பல்வேறு இடங்களில் "மெய்கண்ட தேவன் திருவடி வாழ்க" என வாழ்த்தலாயினர். நாமும் பக்தியுபருக வாழ்த்தி அவர் அருளைப் பெறின் சிவஞான போதம் எமமுடனுறைவிடும்.

## யாழ் நகரில் நிகழ்ந்த பெருவிழா

சென்ற பங்குனித் திங்கள் ஆயிலிய நட்சத்திரம் சிவயோகச் செம்மல் எங்கள் யோக சுவாமிகளின் குருபூசைத் தினம். அன்று யாழ் நகரிலே பெருவிழா சைவங் கமழும் யாழ் நகரில் குருபூசைத தினங்கள், திருவிழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருவது பழமைவாய்ந்தமரபு. சாத்திரங்கள், தோத்திரங்களை நமக்குத் தந்தருளி நாம் ஈடேற வைத்துள்ள நாயன்மார்களின் குருபூசைகள் ஆதி காலந் தொட்டு இச் சைவ நாட்டில் மிகவும் பயபக்தியுடன் கொண்டாடப்பட்டு வருவது வழக்கம். இம் மரபில் நமது குருபரன் யோக சுவாமிகளின் குரு பூசை தெய்வத் திருவிழாவாக யாழ் நகரிலும் செங்கலடி சித்தாண்டியிலும் நிறைவு பெறக் கொண்டாடப்பெற்றுள்ளன. எம்பிரான் யோக சுவாமிகள் ஆயிர மாயிரம் அடியார்களின் ஞான குரு. சைவந் தழைத்தோங்கப் புத்துயிரளித்த புனிதன். பல்லாயிரக்கணக்கான அடியாரை சைவத்துக் கீன்றளித்த ஆசான் சித்தாந்த - வேதாந்த சாஸ்திர தோத்திரங்களை இசை பாடி எமக்குத் தந்த இசையோன்.

பன்னூற்றுக் கணக்கான அடியார்கள், பக்தர்கள் சீடர்களாயினோர் விரதமனுட்டித்துக் குரு வணக்கம் புரியும் புனித தினமித் தினம். ஆயிலிய தினத்திற்கு முந்திய இரு தினங்களிலும் தெய்வத் தலமாகிய சுவாமிகளின் சிவதொண்டன் நிலையத்தில் திருமுறையோதல், புராண படனம், பூசை ஆராதனைகள், மௌன சாதனைகள் இயற்றி ஆயிலியத்தன்று அதி காலையில் ஆராதனை பூசைகளின் பின் மங்கல வாத்தியம் முழங்க பத்தர்கள் கோஷ்டி கோஷ்டியாகக் குருபரன் புகழ் மாலை பாராயணம் பண்ணிய வண்ணம் சுவாமிகளின் திருவுருவப் படம் அலங்காரம் செய்யப்பெற்று வீதிவலமாக நல்லூர் முருகப்பெருமான் சந்நிதி சேர்ந்தார்கள்.

நல்லைத் திருவீதி வலம்வந்ததும் சுவாமிகளின் குருவின் தலமாகிய செல்லப்பாச் சுவாமிகளின் ஆச்சிரம வாயிலில் திருமுருகன் தேர் நிலையத்திற்குக் கிழக்கே சிறு பொழுது தங்கி, இளைப்பாறி ஆங்கு மூர்த்தியின் பூசை முடிந்ததும் பருத்தித்துறைவீதி, கச்சேரி நல்லூர் வீதி வழியாகக் கொழும்புத்துறை ஆச்சிரமத்தை சேர்வார்கள்.

பாத யாத்திரை சென்ற வழிகள் யாவும்வழமைபோல மகர தோரண அலங்காரங்களும் பூரண கும்பம்வைத்து புஞ்பாஞ்சலி செய்து மக்கள் வழிபாடாற்றினர். பாத யாத்திரையில் இவ்வாண்டு அடியர் தொகை வழமையிலும் அதிகம என்று மக்கள் பேசிக்கொண்டனர். கொழும்புத்துறை ஆசிரமம் கண்கொளாக்காட்சியாயிருந்தது. ஆயிரக் கணக்கான அடியார்கள் இங்கு சமுகமாயிருந்தனர். அபிடேகம் பூசை ஆராதனை பஜனை என்பன முடிந்ததும் மாகேசுர பூசை நடைபெற்றது. இப் புனித முறைக்கு வழிவகுத்துவைத்தவர் நமது குரு நாதன். யாழ் நகரில் குருபூசைத் தினங்கள், விழாக்கள் பலவற்றைப் பார்க்கின்றோம். ஆனால் குருபரனின் புனித தினம் யாவருக்கும் வழி காட்டும் பான்மையில் விளங்குவது எனில் மிகையாகாது! நோன்பு நோற்று அதிகாலையிலிருந்து பக்திசிரத்தையுடன் நீடித்த பஜனைப் பாத யாத்திரையிற் கலந்து புனிதராகத் திகழும்சிறப்பை இனறும் இக்குருபூசைகளிற் காண்கிறோம். இப் பாரம்பரியப் பண்புகளை வளர்த்து வரவேண்டியது நம்மவர் கடமையாகும்.

எமது திருமணியை, தித்திக்கும் தீஞ்சுவையை, தேனிஞானை நடமாடுந் தெய்வமாகத் திகழ்ந்த மேதவைப் பெற நம் நாடு என்ன தவம் செய்ததோ? யார் செய்த தவப் பயனோ! என நல்லூர் திருவீதியில் மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்டு மகிழ்ந்தோம்,

"எந்தாயு மெனக் கருள்
தந்தையும் நீ
சிந்தாகுல மானவை
தீர்த்தரு ளாய்"

என அடியவர்கள் பணிந்து பரவி இனபுற்றனர்.

— கா. இ. — நா. க.

## சைவ சமய பாடப் பரீட்சை 1975

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் ஆண்டுதோறும் நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை இவ்வாண்டு 9-11-75 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். விண்ணப்ப முடிபு திகதி 15-9-75.

3 ஆம் வகுப்புத் தொடக்கம க.பொ.த. உயர்தர வகுப்பு வரையுள்ள பாடசாலை மாணவர்கள் இப்பரீட்சைக்குத்தோற்றலாம்.

பாட விதானம் முதலியன பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். தேவையானோர் பரீட்சைக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்

சி. சிவரத்தினம்
பரீட்சைக் காரியதரிசி

## மாரசூர வதம்

கீரிமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாராசூரவதம் திருவிழா 30-3-75 ஞாயிறு பிற்பகல் 4 மணிவரை நிகழும், மறுநாள் திங்கள் சங்காபிடேகமும் அன்னபிடேகமும், தண்டிகைத் திருவிழாவும் இடம் பெறும்.

## சைவ அநுட்டானவிதி

சைவஅனுட்டானவிதி என்ற புத்தகத்தை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தாரிடம் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து சிவதீட்சை வைக்கும்நிலையங்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த வூ பங்குனிமீ கசு௨ வெள்ளி

# நீங்களுமா வேலை நிறுத்தப்

நோயாளிகளுக்கு உடனடியாக ஆய உதவி அளிக்கும் ஆற்றல்பெற்ற அவ்வக் கடமையி லீடுபட்டிருக்கும் மருத்துவர்களே நீங்களுமா வேலை நிறுத்தம் என்னும் கலிகால நவீன முறையைக் கைக்கொள்ள நினைத்துவிட்டீர்கள்!

மேன்மைசால் பணியென்று மேனுட்டார் விதந்துரைக்கும் கடமை புரிகின்ற வைத்திய கலாநிதிகளும் அவ்வழி அவர்களுக்கு அருந்தொண்டாற்றும் வகையில் அமர்ந்திருக்கும் உதவியாளர் அனைவரும் தங்கள் தொழிலின் எழிலையும் தூய்மையையும் ஒரு கணமேனும் கருதி ஆய்வார்களேயானல் இதயபூர்வமாக எண்ணுவார்களேயானல் எக் காரணம் கொண்டும் பிணியாளரைப் பிணித்துப் பாதிக்கும் பாதையில் இறங்கமாட்டார்கள்.

வேலைநிறுத்தம் வேத வாக்கியம் என்ற முறையிலே உலகக் கொள்கையாக அரசியல் ஆதிக்கம் பெற அவாவுகின்றவர்களால் அமைக்கப்பெற்ற பொழுதினும் மனிதக் கடமை எனப்படும் மருத்துவப் பணியிற் பூர்வ புண்ணியவசத்தால் ஈடுபட்டிருக்கின்றவர்கள் அரசியல் ஆதிக்க இயல் அவா வியல் என்றின்னோரன்ன தன்மையைக் கருதும் கொள்கை முறையைக் கொள்வது மேன்மைசால் வைத்திய மரபுக்கே மாசுண்டாக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

நோயுற்றால் முதலிலே மகா வைத்தியனும் பரமேசுவரன்மேல் ஆணை வைத்துப் பின்பு வைத்திய கலாநிதிகளைக் கதியென நம்புவார்கள், பிணி பல வகைப்படும். எப்பிணிக்கும் அப்பொழுதே மருத்துவ உதவி வழங்கப்படுவதவசியம். காலம் தாழ்த்திக் கவனமின்றிக் கடமை தவறினுற் காலன்வந்திடும், அவலநிலை ஏற்படும். எனவே விநாடிப் பொழுதாயினும் தாழ்த்தாது உடனே உதவிபுரிய வேண்டிய கடமையாளர்கள் வருவாயைப் பற்றியோ, உரிமைகளைப் பற்றியோ பிணியாளரைப் பணயம் வைத்துக் கொள்கைப் போராட்டத்திற் குதிப்பது பழியாகும்; பாதகத்துக்கு வழியாகும். பணிக்குப் பங்கமாகும்.

“ மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

என்ற வாய்மைநெறி வகுத்த வள்ளுவனர் தொடர்ந்துரைத்த கருத்திற்கு பொருத்தமாகின்றது.

இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன் ஆகும் மற்றும் பெயர்த்து

# இந்துமாமன்ற இருபதாவது

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

இக் குருகுலத்திற்குரிய செலவு மாத மொன்றுக்கு ரூபா 750 மாமன்றத்தினல் வழங்கப்பட்டு வருகின்றது. இக்குருகுலத்திற்குத தேவைகளோ பல. முக்கியமாக, யாழ் நகரில் கட்டட வசதியுடன் உள்ள இடம் ஒன்றினைப் பெற்றுக் கொடுக்க முயற்சிகள் செய்து கொண்டு வருகின்றோம்.

சங்கங்களும், சைவப்பெரியார்களும் மனமுவந்து வேண்டிய உதவிகளைப் புரிவார்களென எதிர்பார்க்கின்றோம்.

திருக்கேச்சரத்திலிருந்த குருகுலத்தில் ஏழு வருடம் வேதாகமப் பயிற்சிகளைப் பெற்ற பிரம்மஸ்ரீ மனோகர ஐயர் மேலும் வேண்டிய பயிற்சி பெற இந்தியாவிலுள்ள தருமபுரம் ஆதீனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இவரே எமது குருகுலத்தில் முழுமைக்காலமும் பயின்றவராவர். இம் மாணவருக்கு ஆதீனம் தங்கள் செலவில் இருவருடங்களுக்குப் பயிற்சியளிக்கச் சம்மதித்தமைக்கயிட்டு மாமன்றம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

## பிறமதக் கல்வி

சைவப் பிள்ளைகளுக்குப் பிற மதங்களைப் போதிப்பது பற்றிய அரசினரின் கொள்கையை எதிர்த்து வந்துள்ளோம். மேலும் ஆணித்தரமான எதிர்ப்பினைக் கல்வி அமைச்சருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் எடுத்து விளக்கியுள்ளோம். ஆயினும் எமது மன்றத்தின் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

—

# நாவலரும் - கோயிலும்

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

இங்கே சொல்லிய முறையன்றி, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருலிங்க சங்கம மென்னும் மூன்றிடத்தும் ஆசையும் பணியும் வழிபாடும் கொடையும் அடிமைத் திறமும் உரிமையுமுடையவர்கள் எந்தக் கருமஞ் செய்தாலும் முதற்சாதியெனக் கொள்ளப்படுவார்கள்; அத்துவசுத்தி செய்யப்பட்டுச் சிவஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களை ஓதி அவைகளின் பொருளைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த உயிரிலே சிவாசன மூர்த்தி முதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு. தேகாதிப்பிரபஞ்சத்தை விடுத்துச் சிவசம்பந்த முற்றவரே சங்கமம். சிவஞானிகள் பாவனையுற்றதே சிவலிங்கம்.

யாவரும் தமக்கு மேன்மேற் சமயிகளைத் தரிசித்து வணங்கிப் பணி செய்தலும், கீழ்க்கீழ்ச்சமயிகளை நோக்கி இவர்களிவ்வளவில் வந்தார்களே என்று இரங்கி விதித்தன சொல்லி விலக்கியன ஒழித்தலுமே நீதி, இப்படியன்றி ஒருவருக் கொருவர் கலாம் விளைத்தல் நீசி கேடு, தத்துவாதீதசொரூப சிவப்பேறுடையவரை ஈச சதாசிவ சாந்த பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும் இவ்விருதிறத்தாரையும் கந்தசண்ட கணேச பதப்பேருடையவர் வணங்கி வழிபடல் வேண்டும்: இம்மூன்று திறத்தாரையும் இவரிற்சூழ்ந்த பிராகிருதர் வணங்கி வழிபடல் வேண்டும். மேலோர்களாயுள்ள ஈச சதாசிவ சாந்தபதப்பேறுடையவர்களும் கந்த சண்ட கணேச பதப்பேறுடையவர்களுமாகிய சைவர்கள் கீழோர்களாகிய வசுருத்திராதித்த பதப்பேறுடையவர்களாகிய ஸ்மார்த்தர்களை வணங்குதலும் அவர்களைச் சிராத்த முதலியவற்றில் வரித்துப் பூசித்தலும் நீதியா! இதைச் சிந்தியுங்கள்;

சைவசமயிகளே, நீங்கள் இவ்வுண்மைக ளெல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்தறிந்து, சிவபெருமானிடத்தும் உண்மை நாயன்மாரிடத்தும் சிவாகமவிதிப்படி பத்தி செய்தொழுகக் கடவீர்கள். இவ்வுண்மை நிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தக் கடவீர்கள். அது கூடாதாயின், அவர்கள் செய்யும் சிவாகமநிந்தை குரு நிந்தை சங்கமநிந்தை முதலியவற்றைக் கேட்டு எரிவாய் நரகத்துக்கு இரையாகா வண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்து விடக்கடவீர்கள். இப்படிச் செய்யாது மதிமயங்கி அவ்வதிபாதகர்களைப் பெரியோர்களெனக் கொண்டு வழிபட்டொழுகுவது பாவம்! பாவம்!

(அடுத்த இதழில் வளரும்)

# நாவலர் பிள்ளைத்தமிழ்

( 5ஆம் பக்கத்து வளர்ச்சி)

வீறுசெந் தமிழமுத வித்தகக் கவிதைநய
விங்கியா சத்திறத்தின
விவிதாநு பவதீர கவிராஜ சேகரர்
வீரவேற் சரனல்லையிற்
**சாறுகண் டவ்வளவி லூறுகற் பனையிரச**
**தகுதிகண் டதுமொண் டிடுஞ்**
**சட்டிகுட மோடடுப் புந்நெருப்புங்கணடு**
**தந்து சுவை கண்டவ ரினும்**
வேறுமொர் பரிசினச் சாறுசுவை யூட்டுபெரு
விழைவுளரு மாவ ரதனல்
வீரவேள் நல்லைநன் விழாமுரச மீதெனு
விபரீத மேது மின்றித்
தேறுமா றங்கவர் செவிக்கேற வெம்பிரீ
சிறுபறை முழக்கி யருளே
செந்தமிழ்க் குருவையென வந்தருளு மமரபதி
சிறுபறை முழக்கி யருளே. 7.

சத்திய தரிசன ஆர்வ முழங்கச்
சத்திய சுவரூபத்
தார்மிக போதனை நாளு முழங்கத்
தர்ம நெறிப்பயனுந்
தத்துவ போத விசார முழங்கத்
தத்துவ சுத்தியருள்
சற்குரு தரிசன தாகமுழங்கச்
சற்குரு நாதனருள்
பத்தியு ஞானமு மொத்து முழங்கப்
பத்திமை யுள்ளமெலாம்
பணிவக லாதவொர் துணிவு முழங்கப்
பணிவுறு மடியார்பால்
**முத்திய வாவுறு வேட்கை முழங்க**
**முழக்குக சிறுபறையே**
முதுதமி ழிளநல முறவரு நம்பி
முழக்குக சிறு பறையே. 8.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 28—3—1975 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்

கொழும்பில்

# சைவசித்தாந்தப் பெருவிழா

வச்சிரவேலு முதலியார்
இலங்கை வருகிறார்

இலங்கை ஸ்ரீமெய்கண்டார் ஆதீனமும் ஈழத்துத் திருநெறித் தமிழ்மன்றமும் இணைந்து எதிர்வரும் எப்பிரல் 25,26, 27 ந் திகதிகளில் மிகச் சிறப்பான முறையில் ஓர் சைவ சித்தாந்தப் பெருவிழா நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் உயர்திரு க. வச்சிரவேலு முதலியாரவர்கள் முக்கிய பங்கு ஏற்றுக் கொள்வார்கள். சைவசித்தாந்த சாத்திரங்களின் திட்பநுட்பங்களையும் அவற்றின் தனிப் பெருஞ் சிறப்புகளையும் ஈழம் வாழ் சைவத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அறிந்துணர்ந்து ஒழுக உதவும் பொருட்டே இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்றுநாள் விழா முடிவடைந்தபின்னர் மேலும் ஏழுதினங்களுக்கு மக்கள் வாழ்வில் சைவத்திருநெறி” என்னும் பொருள் குறித்து ஓர் கருத்தரங்கும் சாத்திர விளக்கங்களும் தொடர்ச்சியாக நடைபெறும் திரு. வச்சிரவேலு முதலியாரவர்களே இக் கருத்தரங்கையும் நடாத்தி வைப்பார்கள்.

# அராபிய மக்கள் அனைவருக்கும் அனுதாபம்

மத்திய கிழக்கிலே உத்தம மன்னராகச் சவுதி அராபிய மக்களின் ஆரா அன்பிற்குரியராக உலக நாடுகளின் உற்ற நண்பராக விளங்கிய மாட்சிமை தங்கிய அரசர் பைசால் அவர்கள் துப்பாக்கிக் குண்டுக்கிரையாகித் துட்ட இளவரசரொருவரின் கையால் உயிர் நீததார் என்ற துக்க செய்தி மாநிலம் முழுவதையுமே திகைக்க வைத்துவிட்டது.

குவலயத்திற் கொலை பாதகக் கொடுமை வரவரக் கூடுதலாக நிகழ்வதை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மனிதப் பண்புக்கினி இடமேதுமிருக்கின்றதா என்ற கேள்வி தானுக எழுகின்றது.

பாரத நாட்டுப் பிரதமராம் பெண் திலகம் இந்திரகாந்தியைக் கொலை செய்ய எடுத்த பயங்கர முயற்சி தெய்வச் செயலாகத் தடுக்கப்பட்ட செய்திகள் நினைவு இருக்கும் இவ்வேளையில் அராபிய மன்னனுக்குயிர் அபாயம் நிகழ்ந்தமை அட்டூழியத்தின் ஆட்சி அவனியில் வேரூன்றி விட்டதற்கறிகுறியைக் காட்டுகின்றது.

கோரக் கொலைகள் விபரீத விமான விபத்துகள் பெருவெள்ளம் கடுங்குளிர் முதலிய பேத நிகழ்ச்சிகளாலாகும் பரிதாப மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தபடி மனிதகுல மாண்பிற்கு இழுக்கையும் வருங்கால மக்களுக்கு மனத்தடுமாற்றத்தையும் உண்டுபண்ணுகின்றன. அற்பபொருளுக்காக அட்டூழியங்கள் அநேகம் நிகழ்கின்றன, பருவமங்கையர் எங்கிருந்தாலும் கொலை பாதகரின் பரிபதாப முறையிலாவது நாளாந்த நடைமுறையாகிவிட்டது என்னே.

—